புதுச்சேரி அரசு

போக்குவரத்துத் துறை

***

செய்திக் குறிப்பு

எண்.12/TD/RTO(HQ)/2016

தேதி: 03.06.2016

**தலைகவசம் அணிவோம்; விபத்தினை தவிர்போம்**

புதுச்சேரியில் பெருகிவரும் வாகன எண்ணிக்கைக்கு ஏற்ப விபத்துகளும் பெருகி வருகின்றன. புதுச்சேரியில் விற்பனையாகும் வாகனங்களில் 85% இருசக்கர வாகனங்களே. கடந்த நிதியாண்டில் புதுவையில் விற்பனையான 57412 வாகனங்களில் இருசக்கர வாகனங்களின் எண்ணிக்கை 49343 ஆகும். கடந்த 2015-16ஆம் நிதியாண்டில் புதுச்சேரியில் நிகழ்ந்த 1579 விபத்துகளில் 207 நபர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் 747 விபத்துகள் இருசக்கர வாகனம் ஓட்டுனர்களுக்கு ஏற்பட்டுள்ளது; விபத்தின் மூலம் 77 இருசக்கர வாகன ஓட்டுனர் உயிரிழந்துள்ளனர்.

தரமான ISI சான்று பெற்ற தலைகவசம் அணிந்து இரு சக்கர வாகனம் ஓட்டுவதால் 80% விபத்து ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது. தினமும் அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் சொந்த வேலையாக இரு சக்கர வாகனங்கள் பயன்படுத்தும் மாணவ மாணவியர், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் தவறாமல் தலை கவசம் (ஹெல்மட்) அணிந்து பாதுகாப்பான சாலைப் பயணத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இரு சக்கர வாகனம் ஓட்டும் ஆண் பெண் இரு பாலரும் தலை கவசம் அணிய வேண்டும்.

கியர் இல்லாத வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் பெற வேண்டுமானால் 16 வயது நிரம்பியிருத்தல் வேண்டும். கியர் உள்ள இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு 18 வயது நிரம்பியிருத்தல் வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இரு சக்கர வாகனங்களில் செலலும் மாணவ மாணவியர் அதற்குறிய ஓட்டுனர் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். மேலும், ஹெல்மட் அணிந்திருத்தல் வேண்டும். இது குறித்த சுற்றறிக்கை அனைத்து மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கும் முன்னரே அனுப்பப்பட்டுள்ளன.

இரு சக்கர வாகன ஓட்டுபவர்கள் உரிய ஓட்டுனர் உரிமம், வாகன உரிமைச் சான்றிதழ், வாகன தகுதிச் சான்றிதழ், வாகன காப்பீட்டு சான்றிதழ், வாகன சான்றிதழ்கள் ஆகியவற்றினை தவறாமல் எடுத்துச் செல்ல வேண்டும். வாகனம் ஓட்டுபவர் மற்றும் பின் அமர்ந்து செல்லுபவர் தலைக்கவசம் கண்டிப்பாக அணிய வேண்டும். வாகனம் ஓட்டிச் செல்லும் போது செல்போன் பேசுவது கண்டிப்பாக கூடாது. இரு சக்கர வாகனங்களில் இருவர் மட்டுமே பயணிக்க அனுமதி உண்டு.

மேற்கண்ட நெறிமுறையினை கடைப்பிடிக்காத இருசக்கர வாகன ஓட்டிகளிடம் அவர்கள் செய்யும் தவறுகளுக்கேற்ப ஒவ்வொரு தவருக்கும் ரூ.100/-, ரூ.300/- மற்றும் ரூ.500/- என அபராதம் விதிக்கப்படும். போக்குவரத்து சட்ட விதிகளை மீறுவதால் ஏற்படும் சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை தவிர்ப்பதற்காக மேற்படி நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் என்பதால், அனைத்து தரப்பினரும் சாலை விதிகளை கடைபிடித்து விபத்தினை தவிர்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

GOVT OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்